**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.161/2019**

**PW9**

| | | |
|---|---|---|
| **Name** | : | காசிவேலு |
| **Father's Name** | : | குப்பன் |
| **Village** | : | வீரபாண்டி |
| **Taluk/District** | : | காண்டாச்சிபுரம் |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 08.01.2026.

A1 to 3 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விழுப்புரம் மாவட்டம், வீரபாண்டி கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ராஜம்மாளை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 2017 ல் பொரிக்கல் கிராமத்திற்கு மரம் வெட்ட நான் , ஆறுமுகம், செந்தில் வடிவேலன் ஆகியோர் சென்றோம் . எங்களை செந்தில் வடிவேலன் அழைத்து சென்றார். மரம் வெட்ட சென்றபோது வெட்டக்கூடாது என்று நிலத்துக்காரர் தகராறு செய்தார்கள். நாங்கள் மரம் வெட்டுவதை நிறுத்திவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். அதன்பிறகு அங்கு சண்டை நடந்ததாக தகவல் வந்தது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையில் 18.06.2017 அன்று பொரிக்கல் கிராமத்தில் மரம் வெட்டும் வேலை இருப்பதாக ஆறுமுகம் மற்றும் இரண்டு நபர்களை செந்தில் வடிவேலன் அழைத்துச்சென்றார் என்றும் அன்று காலை 8.00 மணியளவில் நிலத்தில் மரக்கிளைகளை வெட்ட ஆரம்பித்தோம் என்றும், அப்போது மரத்திற்கு சொந்தம் கொண்டாடி சிலர் தகராறு செய்தார்கள் என்றும், உடனே பிரச்சனைக்குரிய இடத்தில் மரம் வெட்ட முடியாது என்று சொல்லி மரம் வெட்ட அழைத்தவரிடம் சொல்லிவிட்டு கூலி வாங்காமல் வந்துவிட்டோம் என்றும்,

அதன்பிறகு இரண்டு தரப்பினருக்கும் இடையே சண்டை நடநத்தாக கேள்விபட்டோம் என்றும் சொல்லிவிட்டு, தற்போது உண்மையை மறைத்து எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.